கோவை மத்திய சிறையில் தண்ணீர் தட்டுப்பாடு

*318 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மத்திய சிறைச்சாலையில் தண்ணீர் தட்டுப்பாட்டினை போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோவை மத்திய சிறைக்குத் தேவைப்படும் குடிதண்ணீரை நகராட்சியிடமிருந்து லாரிகள் மூலமாகப் பெறப்படுகிறது. குளிப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் சிறைச்சாலையின் தோட்டத்தில் இருக்கும் கிணற்றிலிருந்து தண்ணீர் சிறைச்சாலைக்கு குழாய்மூலம் செலுத்தப்படுகிறது. அங்கு ஒரு குழாய்க் கிணறு தோண்டுவதற்கும் அரசாங்கம் சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. மற்றுமொரு குழாய்க் கிணறு தோண்டுவது பற்றியும் அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

வண்ணம் மாறும் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி

*319 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்ணம் மாறும் சென்னை கைத்தறித் துணிகளை (Bleading Madras) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டு விட்டதா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

கைத்தறித் துணிகளுக்கு சாயமிடுதல்

*320 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் அச்சுத் தொழில்களின் திறமையை அதிகரிக்க பயிற்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.